செய்தி வெளியீடு எண்.40-2019 நாள்: 18.09.2019

# விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி வட்டத்தில் வருவாய்த்துறை சார்பில் 914 பயனாளிகளுக்கு ரூ.3,43,24,550/- மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் வழங்கினார்.

******

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி வட்டம் காணை ஊராட்சி செந்தமிழ் திருமண மண்டபத்தில் வருவாய்த்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை சார்பில் 914 பயனாளிகளுக்கு ரூ.3,43,24,550/- மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் இன்று (18.09.2019) வழங்கினார்.

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி வட்டத்தைச் சேர்ந்த 747 பயனாளிகளுக்கு ரூ.89,64,000/- மதிப்பீட்டில் முதியோர்/ ஆதரவற்ற விதவை மற்றும் மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை பெறுவதற்கான ஆணையினையும், விக்கிரவாண்டி வட்டம் சித்தலம்பட்டு குறுவட்டம் பாப்பனப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த 46 பயனாளிகளுக்கு ரூ.24,01,100/- மதிப்பீட்டிலும், வடக்குச்சிப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த 1 பயனாளிக்கு ரூ.59,450/- மதிப்பீட்டிலும் வீட்டுமனைப் பட்டாக்களையும், ஊரக வளர்ச்சித்துறை சார்பாக முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் 57 பயனாளிகளுக்கு ரூ.119.7 இலட்சம் மதிப்பீட்டில் பசுமை வீடுகளுக்கான ஆணையினையும், பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜானா திட்டத்தின்கீழ் 38 பயனாளிகளுக்கு ரூ.76.76 இலட்சம் மதிப்பீட்டில் வீடு கட்டுவதற்கான ஆணையினையும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் 20 பயனாளிகளுக்கு ரூ.26.82 இலட்சம் மதிப்பீட்டில் ஆட்டுக்கொட்கை அமைப்பதற்கான ஆணையினையும், 5 பயனாளிகளுக்கு ரூ.6.075 இலட்சம் மதிப்பீட்டில் மாட்டுக்கொட்கை அமைப்பதற்கான ஆணையினையும் என மொத்தம் 914 பயனாளிகளுக்கு ரூ.3,43,24,550/- மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் தெரிவித்ததாவது:

இவ்விழாவிற்கு வருகை தந்தந்துள்ள அனைவருக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் கிராமப்புற மக்களின் வாழ்வு மேம்பட வேண்டும், நகர்புறத்தில் இருக்கும் வசதிகள் கிராமப்புற மக்களுக்கும் கிடைக்க வேண்டும், இதில் குறிப்பாக மகளிர் வாழ்க்கைத்தரம் மேம்பாடு அடைய வேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வந்தார்கள். மேலும் பெண் கல்வியை ஊக்கப்படுத்துவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தினார்கள். சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றுபவர் மாண்புமிகு அம்மா மட்டுமே. மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தலில் கூறிய அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றினார்கள். பிறரால் முடியாது என சொல்லப்பட்ட திட்டங்களை பதவியேற்றவுடன் முதல் கையெழுத்தில் நிறைவேற்றினார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் கிராமப்புற தாய்மார்களின் வாழ்வு மேம்பட வேண்டும் என்பதற்காக விலையில்லா மின்விசிறி, மிக்சி, கிரைண்டர் வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு இலவச திட்டங்களை அறிவித்து செயல்படுத்தினார்கள். அதுமட்டுமல்லாமல் ஏழைத் தாய்மார்கள் தங்களது பிள்ளைகளை கல்வி கற்க பாடுபடுவதை கண்டு, அந்த மாணவர்களின் கல்விக்குத் தேவையான பாடப்புத்தகத்திலிருந்து மடிக்கணினி வரை, ஆரம்பப் பள்ளியிலிருந்து ஆராய்ச்சி படிப்பு வரை அனைத்து வசதிகளையும் மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கினார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தில் செயல்படுத்திய திட்டங்கள் போன்று எந்த மாநிலத்திலும் செய்யவில்லை. மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு அடுத்ததாக, மாண்புமிகு அம்மா அவர்கள் இரண்டாவதாக பதவியேற்றபிறகு ஏற்றிய ஏழை எளிய மக்களுக்கு என்று கடமைப்பட்டுள்ளவராக இருப்பேன் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் ஐந்தாண்டு காலத்தில் தமிழகத்தை குடிசைகளே இல்லாத மாநிலமாக மாற்றுவேன் என கூறினார்கள். குறிப்பாக தமிழகத்திலேயே பெரிய மாவட்டமாக உள்ள விழுப்புரம் மாவட்டத்தை குடிசைகளே இல்லாத மாவட்டமாக மாற்றிக்காட்டினார்கள். 2016ஆம் ஆண்டு மட்டும் 25,000 வீடுகளை ஒதுக்கீடு செய்து கொடுத்தார்கள். கடந்த 4 ஆண்டு காலத்தில் மட்டும் 72,000 வீடுகள் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.1457 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் 72,135 வீடுகள் வழங்கப்பட்டுள்ளது. இதில் 25,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. மாண்புமிகு அம்மா அவர்களின் நோக்கம் இன்னும் ஓராண்டு காலத்தில் நிறைவேற்றப்படும். அதுமட்டுமில்லாமல் விழுப்புரம் மாவட்டத்தில் 10,015 பசுமை வீடுகள் வழங்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ.210 கோடி. அம்மா அவர்களின் இந்த அரசு திட்டங்கள் அனைத்தையும் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. கடந்த வாரம் விக்கிரவாண்டியில் 350 நபர்களுக்கு முதியோர் உதவித்தொகை பெறுவதற்கான ஆணையை வழங்கியுள்ளோம்.

இன்றைக்கு மட்டும் 747 நபர்களுக்கு முதியோர் ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ.90,00,000/-. கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் அரசு மாண்புமிகு அம்மா அவர்களின் இந்த அரசு. தாலிக்கு தங்கம் மற்றும் காசோலை, விலையில்லா மடிக்கணினி போன்ற திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்து செயல்படுத்தினார்கள். ஏழை எளிய மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகளை இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும்தான் அம்மா அவர்களின் அரசு வழங்கியுள்ளது.

பொதுமக்களின் கோரிக்கையான நீண்ட நாட்களாக இருக்கும் இடத்திற்கு பட்டா வழங்க வேண்டும் என்பதுதான். தற்போது அதற்கும் இந்த அரசு தீர்வு காணப்பட்டு விட்டது. நீர்நிலை புறம்போக்குகளில் வசிப்பவர்களுக்கு மாற்று இடம் வழங்கி அதற்கு பட்டா வழங்க வேண்டுமென அரசாணை வெளியிட்டுள்ளது. மேலும் இத்தனை ஆண்டுகாளமாக ஒரே இடத்தில் வசித்து வருபவர்கள் பட்டா கோரி விண்ணப்பித்தால் தகுதியின் அடிப்படையில் பட்டா வழங்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

மேலும் வீட்டுமனை பட்டா கோரி விண்ணப்பித்தவர்களை விசாரணை செய்து அவர்களின் தகுதியின் அடிப்படையில் இன்றைய தினம் 47 நபர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. அம்மா அவர்களின் அரசு ஏழை எளியவர்களுக்கான அரசு. தமிழகத்தின் அனைத்து பகுதி மக்களின் கோரிக்கை இரண்டு. ஒன்று பட்டா வழங்க வேண்டும் என்பது,

மற்றொன்று ஓய்வூதியம் வரவில்லை மீண்டும் வழங்க வேண்டும் என்பதுதான். இந்த இரண்டு கோரிக்கைகளையும் தீர்க்க வேண்டும் என்பதுதான் அம்மா அவர்களின் இந்த அரசின் லட்சியம். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது 9 லட்சம் நபர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது. மீண்டும் இரண்டாவது முறையாக மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது ஓய்வூதியத்தொகையை ரூ.1000/-ஆக உயர்த்தி கொடுத்ததோடு மட்டுமல்லாமல் 32 லட்சம் நபர்களுக்கு கூடுதலாக வழங்கினார்கள்.

தற்போது மீண்டும் ஓய்வூதியம் வரவில்லை என முதியோர்களின் கோரிக்கையினை ஏற்று விடுபட்டவர்களுக்கும், தகுதியானவர்களுக்கும் கூடுதலாக 5 லட்சம் நபர்களுக்கு ஓய்வூதியம் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள். விடுபட்டவர்களும் தகுதியானவர்களும் விண்ணப்பிக்கும் பட்சத்தில் விசாரணை செய்து ஓய்வூதியம் வழங்க அரசும் மாவட்ட நிர்வாகமும் தயார்நிலையில் உள்ளது. சாலை வசதி, குடிநீர் வசதி, பள்ளிகளில் கூடுதல் வசதி போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 1160 பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

விழுப்புரம் மாவட்டம் வளர்ச்சியடைய வேண்டும் என்பதற்காக அம்மா அவர்களின் அரசு பல்வேறு பணிகளை செயல்படுத்தி வருகிறது. ஆகவே பொதுமக்களாகிய நீங்கள் அம்மா அவர்களின் அரசின் மூலம் வழங்கப்படும் அனைத்து திட்டங்களையும் நன்றாக பயன்படுத்தி பயனடைய வேண்டும். மேலும் ஏதேனும் உங்களுக்கு கோரிக்கை இருந்தால் என் கவனத்திற்கு கொண்டுவந்தால் அதனையும் இந்த அரசு செய்து கொடுக்கும் என்று மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.இரா.குமரகுரு (உளுந்தூர்பேட்டை), திரு.எம்.சக்ரபாணி (வானூர்), திரு.அ.பிரபு (கள்ளக்குறிச்சி), மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.பிரியா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வெ.மகேந்திரன், ஆவின் தலைவர் திரு.பேட்டை வி.முருகன், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் திரு.எஸ்.முரளி (எ) ரகுராமன், மாவட்ட பண்டகசாலை தலைவர் திரு.ஆர்.பசுபதி, விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.இராஜேந்திரன், விக்கிரவாண்டி வட்டாட்சியர் திரு.பார்த்திபன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.கணேசன், திரு.அறவாழி மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.